FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319426

1. District : கோயம்புத்தூர். PS: நகர்ப்புற. பரிவு. Year: 2026. FIR No.: 08/2026/ACB/CBE. Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a), 7-A at 1830hrs.
(ii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita. Sections பிரிவுகள்: 106 BNSS-2023.
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.06.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1200hrs Time to : 2200hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.06.2026 Time : 1800 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) VOL I Time : 1800 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு திசை, சுமார் 6 கி.மீ.

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. சபரிதரன் (b) Father's/ Husband's Name : T. V. ஜெகதீஸ்வரன்.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 4/8/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspection Wing officer (g) Address : Office of District Collector, Coimbatore district.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) A.E. தென்னரசு, MVI, RTO office (central), Coimbatore.
2) T. Chandrasekar, Assistant, RTO office (central), Coimbatore.
3) சுரேஷ் (42) S/o பழனி, DV மையம், போத்தனூர் (4) சதீஷ்குமார் (30) S/o ராஜன், DV புதூர், சோலை.
5) கார்த்தி என்கிற S/o (பெயர் புலப்படவில்லை), தேவாங்க தெரு (6) ரவி (35) S/o மாரிமுத்து, சோலை.
7) சிவகுமார் (62) S/o சுப்பையா, புதிய புதூர், பாலாஜி (8) சுப்பிரமணி (52) S/o பழனிசாமி, தென்னமநல்லூர், தொண்டாமுத்தூர்.
9) ரவிச்சந்திர S/o தனபால், 12 வது புதூர், சோலை. (10) செல்வராஜ் (63) S/o முத்து, சிறுமுகை பாலம், போத்தனூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் (1) MM xerox கடை உரிமையாளர் இல்லை (2) பாலாஜி.

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet herewith enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/06/2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.06.2026 at 2000hrs.

Name: பெயர் ..... J. PRABUDASS,
Rank: நிலை ..... Inspector of Police,
No. எண் ..... UIAC, Coimbatore.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

In continuation of FIR (C 8319426) in Coimbatore V&AC Cr.No.08/2026/AC/CB U/s 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, and Section 106 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023.

இன்று 19.06.2026 ஆம் தேதி 18.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் J.பிரபுதாஸ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் T.சங்கீதா, துணை ஆய்வுகுழு அலுவலர்/ தாசில்தார், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 101/2026/ ஐ1, நாள்: 19.06.2026 பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மையம்) - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக 18.06.2026-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு கோயம்புத்தூர் மாவட்டம், மத்திய வட்டாரப் போக்குவரத்து அலுவலக வட்டாரப்போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் மோட்டார் வாகன அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் தங்களது பழகுநர் உரிமம், ஓட்டுனர் உரிமம், புதிய வாகனப்பதிவு, தகுதிச்சான்று போன்றவற்றுக்கு பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்கள், இடைதரகர்கள் திரு.கண்ணன், திரு.சுரேஷ்குமார் மற்றும் அலுவலக வளாகத்தில் Xerox கடை நடத்திவரும் MM Xerox கடை உரிமையாளர் திரு.குட்டி @ பாலமுருகன் மற்றும் Central Xerox கடையில் வைத்தும் கையூட்டு மாமூலாக பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில், துணை ஆய்வுகுழு அலுவலர் ஆகிய நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.J.பிரபுதாஸ், திரு.G.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து மேற்படி மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தை ரகசியமாக கண்காணித்து கொண்டிருந்த போது, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.E.கோகுலகிருஷ்ணன் என்பவர் கோவை வ.ஊ.சி பூங்கா அருகில் இருக்கும் மைதானத்தின் ஒரு பகுதியில் புரோக்கர்களின் உதவியுடன் நான்கு சக்கர வாகனங்களுக்கு தகுதி சான்று (FC) வழங்க ஆய்வு செய்து கொண்டிருப்பதாகவும் அதற்கு லஞ்சமாக பணம் புரோக்கர்கள் மூலமாக பெற்று வருவதாகவும் தகவல் கிடைத்தது. அதனை தொடர்ந்து துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான், ஊ.த.க காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினருடன் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து கொண்டிருக்கும் மேற்படி இடத்திற்கு பகல் 12.00 மணிக்கு சென்று நான் என்னையும் என்னுடன் இருந்த காவல் ஆய்வாளர் மற்றும் உடன் வந்த காவல் குழுவினர் ஆகியோர்களை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு அறிமுகம் செய்துகொண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அருகில் அவருக்கு உதவியாக வாகனங்களுக்கு தகுதி

சான்று (FC) வழங்க ஆவணங்களுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க, அவர் தனது பெயர் (1) P.கண்ணன் த/பெ.பழனி என்றும் அவருக்கு அருகில் ஆவணங்களுடன் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் (2) V.சுரேஷ்குமார் த/பெ.விஜயன் என்றும் மேலும் அவருக்கு அருகில் இருந்த நபர்களை ஒருவர் பின் ஒருவராக விசாரிக்க (3) திரு.V.சதீஷ்குமார் த/பெ.வெள்ளிங்கிரி, (4) திரு.T.N.காஜாமொய்தீன் த/பெ.முகமது ஹனீபா, (5) திரு.கணேசன், த/பெ.பழனிசாமி (6) திரு.சாந்தகுமார் த/பெ.கணேசன், (7) திரு.இர்பான் த/பெ.குலாப்ஜகான் மற்றும் (8) திரு.D.சத்தியராஜ் த/பெ.துரைராஜு என்று தெரிவித்தார்கள். மேற்படி மைதானத்தில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கோகுலகிருஷ்ணன் மற்றும் மேற்படி 8 தனிநபர்களை அவர்கள் வைத்திருந்த ஆவணங்களுடன் அங்கிருந்து மதியம் சுமார் 12.20 மணிக்கு கோவை மத்திய வட்டாரப்போக்குவரத்து அலுவலகம் அழைத்து வந்தோம். மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தை ஒட்டி வெளிப்புறம் வட்டாரப்போக்குவரத்து அலுவலக ஆவணங்களுடன் தனியார் வாகனங்களில் சந்தேகப்படும்படியாக இருந்தவர்களான TN-01-AD-5830 Maruti Wagon-R என்ற வாகனத்தில் இருந்த திரு.ஷாஜகான், TN38-L-5297 என்ற Maruti Omni வாகனத்தில் இருந்த திரு.பிரதீப், TN-20-AQ-0389 என்ற Maruti Omni வாகனத்தில் இருந்த திரு.நவ்பிக், TN-39-Q-3060 என்ற Maruti Omni வாகனத்தில் இருந்த திரு.காஜா உசைன், TN11-W-1334 Hyundai Grand –i10 என்ற வாகனத்தில் இருந்த திரு.மாணிக்கம், TN66-AV-3249 என்ற பதிவெண் கொண்ட அபிராமி ஓட்டுனர் பயிற்சி பள்ளி வாகனமான மாருதி செலிரியோ வாகனத்தில் இருந்த திரு.கார்த்திகேயன் மற்றும் அவர் அருகில் வாகனத்திற்கு வெளியே சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்றுகொண்டிருந்த திரு.பிரேம்குமார் ஆகியோர்களிடமும் திடீர் தணிக்கை மேற்கொள்ள வந்துள்ள விபரம் தெரிவித்து அவர்களை விசாரணைக்காக வட்டாரப்போக்குவரத்து அலுவலகம் அழைத்துவரப்பட்டு அலுவலக வரவேற்பறையில் அமர வைத்தோம். மேலும் எனது அறிவுறுத்தலின் பேரில் காவல் ஆய்வாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் மேற்படி அலுவலகத்தில் இருந்த அலுவலக பணியாளர்களை ஓரிடத்தில் அமர வைத்திருந்தர்வர்களிடமும் என்னையும் என்னுடன் வந்த காவல் ஆய்வாளர் ஆகியோரை அறிமுகப்படுத்தி அவர்களை அலுவலக அறையின் ஒரு பகுதியில் அமர வைத்தோம். மோட்டார் வாகன ஆய்வாளருடன் வ.ஊ.சி பூங்கா மைதானத்தில் இருந்த திரு.P.கண்ணன் என்பவரை ஆய்வுகுழு அலுவலர் விசாரிக்க அவர் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்யும் வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை வசூல் செய்து அவருக்கு கொடுப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றிக்கேட்க இன்று காலை 11.00 மணிமுதல் வசூல் செய்த மாமூல் பணம் ரூ.20,500/- மற்றும் பணம் சம்பந்தமான விபரங்கள் எழுதப்பட்ட 2 எண்ணிக்கை கொண்ட A4 Size பேப்பர்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு A4 Size பேப்பரில் ஒரு பக்கத்தில் 1 முதல் 22 வரை பெயர்களை எழுதி அதில் தொகைகள் குறிக்கப்பட்டிருந்தது. மற்றொரு பக்கம் வெறுமனே இருந்தது. மேலும் மற்றொரு A4 Size பேப்பரில் ஒரு பக்கத்தில் செயலாளர் வட்டாரப்போக்குவரத்து அதிகாரி, கோவை (மையம்) திரு.விஸ்வநாதன் அவர்களின் செயல்முறை ஆணை எண்.26774/அ5/2026 யின் மறுபக்கத்தில் பணத்தொகைகள் 9 வரிசையாக எழுதப்பட்டும், அதில் 5-வது வரிசையில் 10,000-G, 6-வது வரிசையில் 6,000-

Karthi, 7-வது வரிசையில் 12,000-karthi, 8-வது வரிசையில் 12,000- Ins Plasamy, 9-வது வரிசையில் 10,000-G sir என்று குறிப்பிடப்பட்ட பேப்பர்களில் நான் மற்றும் திரு.கண்ணன் கையொப்பம் செய்தோம். மேலும் மேற்படி லஞ்சப்பணம் ரூ.20,500/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த MSX4804 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் Form 25, Form 29, Name Transfer and RC Renewal சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.V.சுரேஷ்குமார் என்பவரை விசாரிக்க, தானும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்யும் வாகனங்களில் உரிமையாளர்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை வசூல் செய்து அவருக்கு கொடுப்பதாக தெரிவித்தார். மேலும் தான் 11.45 மணிக்கு மேற்படி மைதானம் வந்ததாகவும் வந்தது முதல் ரூ.3,600/- வசூல் செய்து வைத்திருப்பதாகவும் கூறி ரூ.3,600/- மற்றும் தொகை விபரம் எழுதப்பட்ட துண்டு சீட்டை ஆஜர் செய்தார். மேற்படி துண்டு சீட்டில் சிவா-660, குட்டி 5500, ராம்-16150/-, ஆனந்த் - 12750/-, செட் -16,200/- ரகுமான் – 10,200/- , பாருக் - 2,000/-, தண்டபானி (Roots) - 1,000/- என எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணம் ரூ.3,600/- மற்றும் துண்டு சீட்டு கைப்பற்றப்பட்டது. அதில் நான் மற்றும் திரு.சுரேஷ்குமார் கையொப்பம் செய்தோம். மேலும் அவரிடமிருந்த TN41AJ6026, TN11AE8885, TN57AW1702 என்ற பதிவெண்கள் கொண்ட வாகனத்தின் Form 29, மற்றும் TN01P1440, TN33R9099 என்ற பதிவெண்கள் கொண்ட் வாகனத்தின் FC சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து திரு.T.M.காஜாமொய்தீன் த/பெ.முகமது ஹனீபா என்பவரை விசாரிக்க, தான் மோட்டார் வாகன அலுவலகம் சம்பந்தமான வேலைகள் செய்து கொடுக்கும் புரோக்கராக வேலை செய்து வருவதாகவும், இன்று MDB 0392 என்ற பதிவெண் கொண்ட லாரியை பாஷா என்பவர் மூலமும், TN66 A 9826 என்ற Mahindra Bolero Maxi Truck என்ற வாகனத்தை திரு.பாலன் என்பவர் மூலமும் கிடைக்கப்பெற்று FC காட்டுவதற்காக வ.ஊ.சி பூங்கா மைதானத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் ஆய்வுக்குழு அலுவலர் விசாரித்துக்கொண்டிருக்கும் போதே அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த மனிபர்ஸ்சை எடுத்து அதில் இருந்த ஆதார் அட்டை மற்றும் ஓட்டுனர் உரிமம் அட்டையை ஒரு பக்கமாகவும் பணத்துடன் இருந்த மனிபர்சை வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நின்றிருந்த வாகனத்தின் அடியிலும் தூக்கி எறிந்தார். மேற்படி மனிபர்சை அவரை எடுக்க சொல்லி பணத்தை ஆஜர் செய்ய சொன்னபோது தனது மனிபர்சில் இருந்த பணம் ரூ.7,700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் விசாரித்தபோது வழக்கமாக வாகனத்தை FC காட்டுவதற்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுக்கும் மாமூல் பணம் எனவும், பயத்தில் பணத்தை தூக்கி எரிந்ததாகவும் தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.7,700/- பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த TN66D1281 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் Form 25, and RC Renewal மற்றும் MDB0392 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் Fitness Inspection/Certificate சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.P.கணேசன் த/பெ.பழனிசாமி என்பவரை விசாரிக்க, தான் மோட்டார் வாகன அலுவலகம் சம்பந்தமான வேலைகள் செய்து கொடுக்கும் புரோக்கராக இருப்பவர் ஜனதா ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் வேலை செய்து வருவதாகவும் இன்று V.B.Jewellery என்ற நிறுவனத்தின் பெயரில் உள்ள TN66-V-1163 பதிவெண் கொண்ட

Hyundai Creta வாகனத்தை உரிமையாளர் பெயர் மாற்றம் செய்வதற்காக வ.ஊ.சி பூங்கா மைதானத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் இருக்கும் பணம் பற்றி கேட்ட போது அவரிடம் இருந்த பணம் ரூ.6,400/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி அவரிடம் கேட்டபோது வழக்கமாக வாகனத்தின் உரிமையாளர் பெயர் மற்றம் செய்ய மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுக்கும் மாமூல் பணம் என தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.6,400/- பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த TN66V1163 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் Form 29, Name Transfer and RC Renewal சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சாந்தகுமார் என்பவரை விசாரிக்க அவர் மோட்டார் வாகன அலுவலகம் சம்பந்தமான வேலைகள் செய்து கொடுக்கும் புரோக்கராக வேலை செய்து வருவதாகவும், இன்று திரு.முத்துகுமார் என்பவருக்கு சொந்தமான TN52-J-1955 என்ற பதிவெண்கொண்ட லாரியை FC காட்டுவதற்காக வ.ஊ.சி பூங்கா மைதானத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.1850/- ஐ ஆஜர் செய்தார் அது பற்றி அவரிடம் விசாரிக்க, வழக்கமாக வாகனத்தை FC காட்டுவதற்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுக்கும் மாமூல் பணம் என தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.1,850/- கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த TN52J1955 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் Fitness Inspection/Certificate சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.V.சதீஷ்குமார் த/பெ.வெள்ளிங்கிரி என்பவரை விசாரிக்க அவர் VLTD GPS Approval க்காக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்க அவரிடம் இருந்த ரூ.7,400/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் விசாரித்தபோது VLTD GPS Approval க்காக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை பார்க்க வந்ததாகவும் மேற்படி பணம் பற்றி விசாரிக்க மேற்படி பணம் ரூ.7,400/- அவர் சொந்த பணம் என்று கூறியதால் விசாரணைக்கு பின்பு மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. திரு.இர்பான்,வயது 31, த/பெ.குலாப்ஜகான், கதவு எண்.608, தடாகம்ரோடு, காந்திபார்க், பொன்னையராஜபுரம் என்பவரை விசாரிக்க, அவர் புரோக்கராக வேலை செய்யும் திரு.பாபு என்பவர் ஆட்டோ ஒன்றை FC காட்ட கொண்டு வருவதாக சொன்னதின் பேரில் அவர் காத்திருந்ததாகவும், அப்போது அங்கு ஆக்டிவா வாகனத்தில் வந்த பாபு திடீர் தணிக்கை குழுவை பார்த்து பயந்து திரும்ப சென்றுவிட்டதாக சொன்னார். திரு.இர்பான் என்பவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.150/-ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் திரு.D.சத்தியராஜ் த/பெ.துரைராஜு என்பவரை விசாரிக்க, அவர் மோட்டார் வாகன அலுவலகம் சம்பந்தமான வேலைகள் செய்து கொடுக்கும் புரோக்கராக இருப்பவர் என்றும் இணையதளத்தில் FC சம்பந்தமான வேலை செய்தது சம்பந்தமாக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு லஞ்சமாக கொடுக்க ரூ.1500/- கொண்டுவந்ததாக தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.1500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது வட்டாரப்போக்குவரத்து அலுவகத்தின் கேட் அருகில் ரூ.1,000/- பணம் கேட்பாரற்று கிடந்தது. மேற்படி பணம் குறித்து அருகில் உட்புறத்தில் இருந்தவர்களிடமும், அலுவலகத்தில் இருந்தவர்களிடமும் விசாரிக்க, பணம் குறித்து யாரும் உரிமை

கோரவில்லை என்பதால் மேற்படி பணம் லஞ்சப்பணமாக இருக்ககூடும் என்பதால் மேற்படி பணம் ரூ.1,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக வளாகத்திற்கு அருகில் TN38-L-5297 என்ற Maruti Omni வாகனத்தை நிறுத்தி அதில் வட்டாரப்போக்குவரத்து அலுவலக ஆவணங்களை வைத்திருந்த திரு.பிரதீப் என்ற நபரை விசாரிக்க, அவர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் முன்பு மேற்படி வாகனத்தில் RTO அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்துகொடுக்கும் புரோக்கராக இருப்பதாக தெரிவித்தார். மேற்படி வாகனத்தை சோதனை செய்ததில் மேற்படி வாகனத்தின் மையப்பகுதியில் இருந்த மரத்தால் ஆன மர டிராயரில் ரூ.7,300/- காணப்பட்டது. மேற்படி பணம் சம்பந்தமாக விசாரிக்க அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு கொடுப்பதற்கு வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. அதேபோல் TN-01-AD-5830 Maruti Wagon-R என்ற வாகனத்தில் இருந்த திரு.ஷாஜகான் த/பெ.இஸ்மாயில் என்பவரை விசாரிக்க, வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் முன்பு மேற்படி வாகனத்தில் RTO அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்துகொடுக்கும் புரோக்கராக இருப்பதாக தெரிவித்தார். அவரின் வாகனத்தை சோதனை செய்தபோது ரூ.650/- இருந்தது. மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. TN-20-AQ-0389 என்ற Maruti Omni வாகனத்தில் இருந்த திரு.நவ்பிக் த/பெ.சேக் தாவூத் என்பவரை விசாரிக்க, RTO அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்துகொடுக்கும் புரோக்கராக இருப்பதாகவும் மேற்படி வாகனத்தில் இருந்து மேற்படி பணிகளை செய்வதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருக்கும் பணம் பற்றி விசாரிக்க ரூ.500/- ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் TN-39-Q-3060 என்ற Maruti Omni வாகனத்தில் இருந்த திரு.காஜா உசைன் என்பவரை விசாரிக்க அவரும் மேற்படி வாகனத்தில் இருந்துகொண்டு RTO அலுவலகம் சம்பந்தப்பட்ட வேலை செய்யும் புரோக்கராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.3,550/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் சம்பந்தமாக விசாரிக்க மேற்படி பணம் வாடிக்கையாளர்களுக்கு இணைய தளம் மூலம் கட்டணம் செலுத்த பெறப்பட்ட தொகை என கூறி பரிவர்த்தனை விபரங்களை காண்பித்தார். விசாரணைக்கு பின்பு மேற்படி பணம் அவரிடம் திரும்ப வழங்கப்பட்டது. மேலும் TN11-W-1334 Hyundai Grand – i10 என்ற வாகனத்தில் இருந்த திரு.மாணிக்கம் என்பவரை விசாரிக்க அவரும் மேற்படி வாகனத்தில் இருந்துகொண்டு RTO அலுவலகம் சம்பந்தப்பட்ட வேலை செய்யும் புரோக்கராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.2,500/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் சம்பந்தமாக விசாரிக்க மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் TN66-AV-3249 என்ற பதிவெண் கொண்ட அபிராமி ஓட்டுனர் பயிற்சி பள்ளி வாகனமான மாருதி செலிரியோ வாகனத்தில் இருந்த திரு.கார்த்திகேயன் மற்றும் அவர் அருகில் வாகனத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த திரு.பிரேம்குமார் த/பெ.கிருஷ்ணன் ஆகியோரை விசாரணை செய்து பணம் சம்பந்தமாக கேட்டபோது திரு.பிரேம்குமார் என்பவர் ரூ.9,500/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் சம்பந்தமாக விசாரிக்க அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால்

மேற்படி பணம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு கொடுப்பதற்கு வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன அலுவலகத்தில் இருந்த பணியாளர்களை ஒருவர் பின் ஒருவராக விசாரிக்க, திரு.S.சந்திரசேகர் என்பவர் தான் மேற்படி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றி கேட்க அவர் ரூ.790/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கை மற்றும் shoulder Bag-ஐ சோதனை செய்ததில் அதில் ரூ.2,100/- பணம் இருந்தது. அது பற்றி அவரை விசாரிக்க அவர் பதற்றத்துடன் முன்னுக்கு பின் முரனாக பதில் சொன்னார். எனவே மேற்படி பணம் லஞ்சப்பணமாக பெற்றிருக்கக்கூடும் என கருதி மேற்படி பணம் ரூ.2,100/- கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து திரு.R.அழகுசுந்தர் என்பவரை விசாரிக்க அவர் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.350/- ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. திரு.நிர்மல்ராஜ் என்பவரை விசாரிக்க அவர் மேற்படி அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.205/- ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து திரு.R.பாலமுருகன் என்பவரை விசாரிக்க, தான் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.650/- ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து திரு.T.சீனிவாசராகவன் என்பவரை விசாரிக்க, அவர் மேற்படி அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.480/- ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து திரு.T.கணேஷ் என்பவரை விசாரிக்க, அவர் மேற்படி அலுவலகத்தில் தட்டச்சராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவரிடம் இருந்த பணம் ரூ.100/- ஐ ஆஜர் செய்து மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. திருமதி.கோதைராணி என்பவரை விசாரிக்க, அவர் வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க ரூ.1,000/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் திருமதி.J.சிவசங்கரி என்பவரை விசாரிக்க அவர் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் ரூ.730/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவர் சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த கண்காணிப்பாளர் திருமதி.ஆர்த்தி, உதவியாளர்கள் திருமதி.ஜோதிலெட்சுமி, திருமதி.வனிதாராணி, இளநிலை உதவியாளர்கள் திருமதி.லட்சுமிபிரபா, திருமதி.ரம்யா மற்றும் திருமதி.தானுஸ்ரீ, Bonten Software Pvt Ltd data Operator அவர்களை விசாரித்தும் அவர்களிடமிருந்த பணம் சொந்த பணம் என்பதால் அவர்களிடமே திரும்ப

கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தின் வளாகத்தில் அமைந்துள்ள MM Xerox கடையை சோதனை செய்தும் அங்கு வேலை செய்யும் திரு.கரன்குமார் மற்றும் உரிமையாளர் குட்டி அவர்களின் அண்ணன் திரு.ராமமூர்த்தி ஆகியோர்களை விசாரணை செய்தும் திரு.குட்டி @ பாலமுருகன் பற்றி விசாரணை செய்த போது அவர் இன்று காலை கடைக்கு வந்துவிட்டு காலை சுமார் 11.00 மணிக்கு மதுரை செல்வதாக சென்றுவிட்டதாகவும் அப்போது திரு.கரன் குமார் என்பவரது டேபிளில் டிராயரை பார்த்தபோது ரூ.770/- இருந்தது அது பற்றி கேட்டபோது Xerox எடுத்ததற்கு வாடிக்கையாளர்கள் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். அதன்பேரில் மேற்படி பணம் ரூ.770/- திரும்ப கொடுக்கப்பட்டது. திரு.குட்டி @ பாலமுருகன் அமரும் இருக்கைக்கு முன்பு இருந்த டேபிள் டிராயரில் தனியாக வைக்கப்பட்டிருந்த இருந்த பணம் ரூ.1,650/- பற்றி கேட்ட போது அவர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கு கொடுக்க வசூல் செய்து வைத்திருந்த லஞ்ச பணம் என்று தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.1650/- கைப்பற்றப்பட்டது. மேலும் அவர்களிடமிருந்த 2375615326 Premkumar மற்றும் Palanisamy என்பவர்களது Badge, 2503216426 Ravikumar என்பவரின் Duplicate DL, 2046222626 Narayanan என்பவரின் Re-validation of Expired DL, 2503466426 Keerthiraj , Senthil kumar என்பவர்களின் issue of duplicate DL சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் Central Xerox கடையில் இருந்த உரிமையாளர் திரு.ராஜேந்திரன் மற்றும் கடையில் வேலை செய்யும் திருமதி.கவிதா என்பவர்களிடம் விசாரணை செய்ததில் தான் இன்று Xerox எடுத்ததற்கு வாடிக்கையாளர்கள் கொடுத்த பணம் ரூ.250/- மட்டும் இருப்பதாக தெரிவித்தார்கள். மேற்படி பணம் அவர்களிடமே திரும்ப வழங்கப்பட்டது. மேலும் 2943781625 and 4014528623 Laxmi Niranjana and Mohan என்பவர்களின் Issue of Duplicate DL, சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேற்படி இரண்டு Xerox கடைகளிலும் வட்டாரப்போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட 7 அசல் ஆவணங்கள் மேற்கண்டவாறு இருந்தது. எனவே அவர்கள் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே புரோக்கர்களாக செயல்பட்டு பொதுமக்களிடம் லஞ்சம் பெற்று மாமூல் கொடுப்பது தெரிய வருகிறது. இத்திடீர் சோதனையின் போது புரோக்கர்களிடமிருந்து 1 முதல் 17 ஆவணங்கள் மற்றும் வட்டாரப்போக்குவரத்து அலுவலத்தில் பராமரிக்கப்பட்டு வந்த ஆவணங்கள் 1 முதல் 3 வரையிலான ஆவணங்களை நகல் எடுக்கப்பட்டு நான், நேர்முக உதவியாளர் திருமதி.கோதைராணி மற்றும் சம்பந்தப்பட்ட கைப்பற்றப்பட்ட நபர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டு மேற்படி ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அசல் ஆவணங்கள் வட்டாரப்போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.கோதைராணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கோகுலகிருஷ்ணன், உதவியாளர் திரு.சந்திரசேகர், தனிநபர்கள் திரு.பிரதீப்குமார், திரு.காஜமொய்தீன், திரு.கணேசன், திரு.சாந்தகுமார், திரு.கண்ணன், திரு.சுரேஷ்குமார் மற்றும் திரு.பிரேம்குமார் ஆகியோரை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீர் சோதனையின் போது மொத்தம் மேற்படி நபர்களிடமிருந்து ரூ.63,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை நடவடிக்கை 18.06.2026-ம் தேதி 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து எடுத்துவரப்பட்ட கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் தணிக்கையின் போது

கைப்பற்றப்பட்ட பணம் ரூ.63,100/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கோகுலகிருஷ்ணன், உதவியாளர் திரு.சந்திரசேகர், தனிநபர்கள் திரு.பிரதீப்குமார், திரு.காஜமொய்தீன், திரு.கணேசன், திரு.சாந்தகுமார், திரு.கண்ணன், திரு.சுரேஷ்குமார் மற்றும் திரு.பிரேம்குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் மேற்படி கோவை மத்திய வட்டாரப் போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.A.E.கோகுலகிருஷ்ணன், உதவியாளர் திரு.சந்திரசேகர், தனிநபர்கள் திரு.கண்ணன் த/பெ.பழனி, 127, ரொட்டிக்கடை வீதி, பி.என் பாளையம், கோயம்புத்தூர், திரு.சுரேஷ்குமார் த/பெ.விஜயன், 46-C, மும்முநாயக்கர் வீதி, பி.என் புதூர், கோயம்புத்தூர், திரு.காஜாமொய்தீன் த/பெ.முஹம்மது ஹனிபா, 813, வின்செண்ட் ரோடு, கோட்டை, கோவை, திரு.பிரதீப் த/பெ.லட்சுமிநாராயணன், க.எண்.14/26, ஹப்பி ஸ்பேஸ், பேரூர், ராமசெட்டிபாளையம், கோயம்புத்தூர், திரு.சாந்தகுமார் த/பெ.கணேசன், 109-B, new no-16, 3வது வீதி, முதல் குறுக்கு தெரு, கணபதிபுதூர், கோயம்புத்தூர், திரு.கணேசன் த/பெ.பழனிசாமி, 21 சூரியகவுண்டர் வீதிவெள்ளலூர் கோயம்புத்தூர், திரு.சத்தியராஜ் த/பெ.துரைராஜு, 132 கல்கி வீதி, இரத்தினபுரி கோயம்புத்தூர், திரு.பிரேம்குமார் த/பெ:கிருஷ்ணன் 2-C ஸ்ரீவள்ளி நகர், ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர் மற்றும் MM Xerox கடை உரிமையாளர் திரு.குட்டி என்ற பாலமுருகன் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு:- 1) திடீர் சோதனை நடவடிக்கைகள். 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.63,100/- 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் (1 முதல் 20 வரை) 4) பதிவு செய்யப்பட்ட 9 வாக்கு மூலங்கள். 5) தொகை, பெயர் விபரம் 2 A4 Size தாள்கள் மற்றும் 1 துண்டு சீட்டு. Respected Madam, Received the complaint along with the proceedings, statements, photocopies of relevant documents, cash amounting to Rs.63,100/-, two A4-size sheets containing cash and name details, and one handwritten loose slip containing cash and name details on 19.06.2026 at 18.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.08/2026/AC/CB U/s 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, and Section 106 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 on 19.06.2026 at 18.30 hrs. (Sdxxxxx) 19/06/2026 (J.PRABUDASS), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் ஆய்வு நடவடிக்கைகள், வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.63,100/-, தொகை, பெயர் விபரம் 2 A4 Size தாள்கள் மற்றும் 1 துண்டு சீட்டு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

19/06/2026.

(J.பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோவை.